# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ந் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ce
P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-கூசு] யாழ்ப்பாணம்:- நந்தன வரு மாசிமீ கசூ உ வெள்ளிக்கிழமை (27 Feb. 1953) [இல - அஎ]


# யாழ்ப்பாணக் கமக்காரரின் இன்னல்கள்

## எங்கள் அரசாங்கம் அறியுமா?

( யாழ்ப்பாணக் கமக்காரன் எழுதுவது )

யாழ்ப்பாணக் கமக்காரர் அரிசி உணவு பெறும் பொருட்டு ஆண்டுக் கொருமுறை ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து நிற்கின்றனர். ஆகாயம் ஆண்டு தோறும் வேறு வேறு முறைகளைக் கையாளுகின்றது. இதுபொழுது கழிந்து வருகின்ற கமக்காரர் ஆண்டிலே நெல்விதைப்புக் காலத்திலே பருவமழை பெய்து எங்கும் நல்ல பயிர் காணக் கிடந்தன.

ஆனாற் களைபிடுங்குங் காலத்திலே தூமி மழையாற் களை பெருகிப் பிடுங்கும் வழிதெரியாது கலங்கினர் கமக்காரர். சம்பளம் நாளொன்றுாய் பாறி மாறி உயர்ந்தது. ஆண்டு முழுதும் அலைந்துலைந்து அளவுக்கு விஞ்சிய பணம் செலவழித்து ஆக்கிய பயிரை அழியவிடலாமா என நினைத்து மேலும் பெருந்தொகைப் பணம் செலவழித்துக் களை பிடுங்கினோர் ஒருபால், தங்கள் முழுநேரத்தையும் களைபிடுங்குதற்கு அர்ப்பணஞ் செய்தோர் ஒருபால், எம்மால் ஒன்றுஞ் செய்ய இயலாதென்று விட்டோர் மற்றொருபாலாய்க் கமக்காரர் வருந்தி நின்றனர். பின்பு சிறிது காலம் மழை பெய்யாதொழிந்தது. பயிர்கள் வாடின. கதிர் ஈனும் பருவத்திற் பயிர்களிற் பழுதுண்டாயது.

### வரவுக்கு விஞ்சிய செலவு

விளைவினறிப் பயிரழிவுமென்று நினைத்தற்குப் பல ஏதுக்களிருந்த அந்தக் காலத்திலே அரசாங்கத்தார் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களின் அரிசித் துண்டுகளைத் (Coupons) தங்கள் மனம் போனவாறு வெட்டினார்கள். வெட்டினதற்கு ஆதாரம் வயலிலிருந்து வீட்டுக்கு நெல்வருமென்பதே. பலவிடங்களில் விளைவு பழுதுற்றது. சிலவிடங்களிற் சிறிது விளைவு காணப்பட்டது. விளைந்ததை அறுத்துச் சூடாக்கச் சிலர் முயலும் பொழுதும் சிலர் அறுக்கத் தொடங்குமுன்னரும் பெருமழை வேண்டாம் வேண்டாமென்னப் பெய்தது. கெடுப்பதூஉம் மழை என்று கமக்காரருக்குப் பெருங் கேடு விளைத்தது. சிறிது நெல்லு வரும் கமக்காரருக்கே அந்நெல்லு சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற் பணம் என்ற முறையில் வருகின்றது.

### வெங்காய வீழ்ச்சி

இது இப்படியிருக்க, சென்ற ஆண்டு வெங்காயம் கிடைப்பதரிதாயிருந்து விலை மிக மிக அதிகமாயிருந்தது. அரசாங்க ஐக்கியப் பகுதியாரும் பிறரும் வெங்காயச் செய்கையில் ஊக்கஞ் செலுத்துமாறு கமக்காரரைத் தூண்டினர். பெருந்தொகைக் கமக்காரர் பலவிடங்களில் ஏறக்குறைய அந்தர் ஐம்பதுரூபா வீதம் விலைக்குவிதை வெங்காயம் வாங்கி வைத்தனர். வெங்காயம் கிண்டி விற்கும் காலம் வந்ததும் வெங்காயவிலை அந்தர் பதினறு பதினேழு ரூபாவாக வீழ்ந்தது. விதை வெங்காய விலையுடன் நிலம் பண்படுத்தல் பசளையிடுதல் நடுதல், தண்ணீரிறைத்தல, கிண்டுதல் முதலியவற்றின் செலவுகளையுங் கூட்டிப் பார்த்தால் மூன்று நாலு மடங்கு வெங்காயம் விளைந்தவருக்கே நட்டம் கிட்டுகின்றது. மற்றவர்களுடைய கதை பேச வேண்டியதில்லை.

இவற்றை எங்கள் அரசாங்கம் அறியுமா? அறியாதா? அரசாங்க உறுப்பினராகிய எங்கள் பிரதிநிதிகள் அறிந்தனரா அறிகிலரா? அறிந்தாராயின் ஆண்டுதோறும் கமக்காரர் இவ்வாறு நட்டமடைந்து

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## கடல் விடந்தனையுண்டு கண்டத்தேவைத்த பித்த...!

திருச்சிற்றம்பலம்.

கோலமால்வரை மத்தென நாட்டிக் கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த
வாலநஞ்சு கண்டவர் மிகவிரிய வமரர்கட் கருள்புரிவது கருதி
நீலமார் கடல்விடந் தனையுண்டு கண்டத்தேவைத்த பித்தநீ செய்த
சீலங்கண்டுநின் திருவடியடைந்தேன் செழும்பொழிற்றிருப்புன்கூருளானே

திருச்சிற்றம்பலம்.

# கல்விச் சாலைகளிற் சமயக்கல்வி

## அதை வளர்ப்பது ஆசிரியர்களின் அறிவொழுக்கமே

‘வண்ணைக் குமரன்’

ஏனைய சமயப் பள்ளிக்கூடங்களில் தத்தம் சமய பாடங்கள் படிப்பிக்கப்படுவது போல சைவ சமய அறிவு அவ்வளவு ஆர்வத்துடன் சைவப் பள்ளிக்கூடங்களிற் படிப்பிக்கப்பட்டு வருகின்றதென்று எவருஞ் சொல்லமாட்டார். இது உண்மை. இதை நன்கு உணர்ந்துபோலும் யாழ். சைவபரிபாலன சபைக் காரியதரிசியவர்களும், சைவப் பள்ளிக்கூட அதிபர்களையும் மற்றோரையும் சிவஸ்ரீ. ஈசானசிவாசாரியரவர்களுடன் சேர்ந்து ஆலோசிக்கச் செய்தனர். கூடினவிடம் வித்தியாலயமாதலால் நல்ல பயன் எதிர்பார்க்கப்படுகிறது.

உபாத்திமார் ஆர்வங்கொண்டு, ஆசாரசீலராய் வழிகாட்டி நடந்து, அபிமானத்துடன் கற்பிக்க வேண்டுமென முடிந்ததாக உங்கள்

தொடர்ச்சி 3-ம் பக்கம்

# சரியையாதி நெறிகளின் தாற்பரியம்

## அந்நெறிகளை யடைய அரனை வேண்டுவோம்.

தென்னுபிரிக்கா டர்பன்
திரு. ச. மு, பிள்ளை
அவர்கள் வரைவது

### தாதமார்க்கம்

ஆண்டவனிடத்து அடிமையொழுகுவதுபோலக் கடவுளிடத் தொழுகுவது சரியையாம். இது தாதமார்க்கமென்று சொல்லப்படும். இத் தாதமார்க்கத்திலொழுகு முறைமையை யொழுகி நமக்குத் தெரிவித்தவர், பாரதத்துவ வுத்தம ஞானவித்தகராய் விளங்கிய அப்பர் சுவாமிகளாவர். இவர் பிரம்ம ஞானியாயிருந்தும் நம்மனோர் நன்னெறிக் கண்டுய்யுமாறு தான், தமது விதேக முத்தி (தேகமில்லா நிலை) பரியந்தம் சரியையென்னும் தாத மார்க்கத்திலேயே யொழுகிக் காட்டினர்.

### சற்புத்திர மார்க்கம்

பிதாவினிடத்துப் புத்திரனொழுகுவதுபோலக் கடவுளிடத் தொழுகுவது கிரியையாம். சற்புத்திர மார்க்கமென்று சொல்லப்படும். இச்சற்புத்திர மார்க்கத்திலொழுகு முறைமையை யொழுகி நமக்குணர்த்தியவர் ஞானசம்பந்தப் பெருமானவர். சுப்பிரமணியக் கடவுளது திருவவதாரமாகிய திருஞானசம்பந்த சுவாமிகள் தமக்கென்று செய்யவேண்டுவ தொன்றில்லையாயினும், எனது உனது, யான் நீ என்றற்றொடக்கத்து அபிமானங் காரணமாக நாம் அவா வென்னுந்தேரின்மீதேறி விரைந்து [illegible] புண்ணிய [illegible] பயனாகச் சுவர்க்கலோகத்திற்கும் பாவ கருமத்தின் பயனாக நரகலோகத்திற்கும், மிசிர கருமத்தின் பயனாகப் பூலோகத்திற்குஞ் சென்று, சுக துக்கங்களால் மொத்துண்டு வதைவது காலக்கிரமத்தில் நீங்கிக் கதிபெறத்தான், தமது சொந்த வடிவத்தைப் பெறுமளவும் கிரியையென்னும் சற்புத்திர மார்க்கத்திலேயே யொழுகிக் காட்டினர்.

### சகமார்க்கம்

தோழனிடத்துத் தோழனொழுகுவது போலக் கடவுளிடத் தொழுகுவது யோகமாம். இது சகமார்க்கமென்று சொல்லப்படும். இச் சகமார்க்கத்திலொழுகு முறைமையை நமக்கறிவித்தவர், சுக்கிலத்தியானமென்னுஞ் சுத்தயோகத்தில் நிலைபெற்று விளங்கிய சுந்தரசுவாமிகளாவர். தம்பிரான் தோழனென்னுந் திருநாமமுடைய சுந்தர சுவாமிகள் ஒரு காரண விசேடத்தால் பூமியில் வந்தவதரித்த புண்ணியராதலின், அவர்க்கு உண்மையிற் செய்யக்கடவதொன்றுமின்றாம்; ஆயினும் அவர் நம்மனோர் மனமாண்ட நிலையின் மாட்சிமையைப் பெற்றுய்யுமாறுகத், தாம் பூலோகத்திலுள்ள பரியந்தம் யோகமென்னும் சகமார்க்கத்திலேயே யொழுகிக் காட்டினர். இப் பரம ஞானி, யோகியா யொழுகினாரென்பது, அவர் கைலாயத்திற்கு வெள்ளையானைமீதேறிச்சென்றாரென்பதினால் இனிது விளங்கும். வெள்ளை யானை மீதேறிச் சென்றாரென்பது சுக்கிலத்தியான முடையவரா யொழுகினாரென்பதாம். சுக்கிலத்தியானமாவது உயிர் தன் அவிச்சை (விபரீத புத்தி) கெட்டுப் பரம்பொருளோடு ஒற்றுமையுற அதனை யிடைவிடாது பாவித்திருப்பதாம்.

### சன்மார்க்கம்

விஷ்ணுவே இராமன், இராமனே விஷ்ணு என்பதுபோல, சிவமே ஆத்மா, ஆத்மாவே சிவமென்றுணருதல் ஞானமாம். இது சன்மார்க்கமென்று சொல்லப்படும், இம் மார்க்கத்தை யடையுங் கிரமத்தை நமக்கு நன்கு விளக்கியவர் மணிவாசகப் பெருமானவர். இப் பெருமான் பரமாத்வைத ஞானியாய் விளங்கினாரென்பது, அவர் அச்சோப்பதிகத்தில் “சித்தமல மறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட, அத்தனெனக் கருளியவாறார் பெறுவாரச்சோவே” என்று திருவாய்மலர்ந்திருப்பதால் செவ்வனே விளங்குவதாம். இவர் தம் ஆத்மஞான நிலையினைச் செய்யுள் வடிவமாக வுணர்த்தியது நம்மனோர் அகர்த்தத்தி (துக்கத்தி) னின்றும் நீங்கி அறிவானந்தமாக விளங்கும் நிலையினைப் பெறுவதற்கேயாம்.

நான்கு மார்க்கங்களுள் தாதமார்க்கமென்னுஞ் சரியையே, அஞ்ஞானகாரமாகித தேகமே, ஆத்மாவென்று திரியாயுணர்ந்து தியங்கும் நமக்கிப்போது இன்றியமையாததாம். சரியை மார்க்கத்தி

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

வைத்தியப் பகுதி

# விடபேதிஉற்பத்திக்குக்காரணம்

## அவற்றைநீக்கும் வைத்திய முறைகள்

திரு. இ. தியாகராசன்
சாந்திநிகேதன்
காயன்மார்கட்டு

விஷூசிரோகமெனப்பட்ட இக்ரோயானது சூரியவெப்பத்தினால்உற்பத்தியாகின்றது என்பது ஆயுள்வேத சாஸ்திரசம்மதம். இது ஊழிக்காற்றுப் படலத்தில் ஆயுள்வேத சாத்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றது. தேகத்திலுள்ள இரத்தத்தை முழுதும் கெட்ட காற்றுந் தண்ணீர் மயமாக்கி விடுகிறபடியால் இது தொற்றுந் தன்மையுள்ளதென்பது சித்த ஆயுள்வேத சம்மதம். ஆகையினால் இது வேறு தேசங்களில் மாத்திரம் இருந்து இத் தேசங்களுக்கு வந்ததென்று முழுதும்கொள்ள முடியாமலிருக்கிறது.

இதற்கு வைத்தியம் கற்பூரத் தைலத்தைத் தேகமெங் கும் பூசுதல். கடுகு வெள்ளைப்பூண்டு, கற்பூரம், முருங்கைப் பட்டை இலைகளைச் சாராயம் விட்டரைத்துத் தேகமெங்கும் பூசியிருந்து பின் வெந்நீரால் கழுவுதல. பின இந்தலைபனத்தைப் பொருத்துக்களிற் பூசிக் கம்பிளியாற்போர்த்தல், இவை முதறபடியாய்ச் செய்யத்தக்கன. இவற்றுடன் ஆயுள்வேத சாத்திரங்களிற் கூறியிருக்கும் மருந்துகளை முறைப்படி நோயாளிக்குக் கொடுக்க [illegible] வலிகுன்றி நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். நந்தன ஞு மாசி மீ
கசு உ வெள்ளிக்கிழமை

## வள்ளுவரை உள்ளுவம்

ஒழுக்கம் இல்லா உலகம் ஒற்றுமை குன்றி வேற்றுமைப்பட்டு அல்லற்படுகின்றது. நுண்ணிய லறிஞர்கள் எண்ணியெண்ணிப் பார்த்தும் வழி கண்டிலர். மதபோதகர்கள் ஆனமட்டும் முயன்றும் ஆறுதல் பெற்றிலர். சமயக் கல்வி ஊட்டி இளைஞர்களை ஒழுக்கநெறியில் அமைக்கலாம் என்று நற்புத்தி மொழி பகர்வாரைக் காண்கிறோமன்றி அவ்வாறு செய்வாரை அறிகின்றிலேம்.

இந்த நிலைமையிற்சமயப் பெருங் குரவர்களின் குருபூசை நாள்களும் வழமைபோல் வந்துகொண்டேயிருக்கின்றன. பழைய முறையிற் பலர்கூடித் திருத்தொண்டர்களை நினைந்து நல்லொழுக்கவழி நிற்றலில்லாது பலர் கூடிப் பேசிக் கொண்டாடி விடுவதாய் முடிகின்றனவே இப்பெருநாட்கள். அண்மையில் வள்ளுவர்நாள் வருகின்றது. அன்றும் அவ்வாறு வாய்வேதாந்தம் பேசி விடுவார்கள் என்றே சொல்லலாம். வேண்டும்.

ஆனால் இத்திருத்தொண்டர்கள் உள்ளக் கிடக்கையை அன்னார்வாய்ப்பிறந்த அருமருந்தன்ன நற்பொருளைப் பாடத்திட்டத்திலே தரத்துக் கேற்றபடி அமைத்துப் பாலர் வகுப்புத் தொடங்கிப் பல்கலைக் கழகப் படிப்பு வரைக்கும் கற்பவர் கற்றுத் தெளியக் கல்விப் பகுதியாரும் பள்ளிக்கூட ஆசிரியர்களும் சமயக் கழகங்களும் நூல்கள் ஆக்கியோ திரட்டியோ உலகுக்கொரு நற்பணி செய்து ஒழுக்க நெறியை நிலைநாட்டத் தொண்டாற்றக்கூடாதா?

வள்ளுவர் நன்னாளில் உள்ளுதற்கு நாம் ஒன்று கூறுகின்றோம்.

"சொல்லுதல் யார்க்கும்
எளியவரியவாஞ்
சொல்லியவண்ணஞ்செயல்"

வினைத் தூய்மையின் பின் வினைத் திட்பஞ் சொன்ன திருத்தகு தெய்வவாக்கின் பொருத்தமீண்டுக காண்க! வினை முடிப்பானுக்கு வேண்டுவது மனத்திண்மையன்றோ? என்னை?

எனைத் திட்ப மெய்தியக்
கண்ணும் வினைத் திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

நொத்தொண்டர் திருநாள்

## அறிவியல் நூல் தந்த பெருநாவலர்!

திருவள்ளுவ நாயனார் இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரமாண்டுகளுக்கு முன்னே திருமயிலையில் திருவவதாரஞ்செய்து இல்வாழ்க்கை எழில் பெறுமாறு வாழ்ந்து தம் வாழ்க்கையிற் கண்ட உறுதிப் பொருள்களை எம்மனோர் பொருட்டுப் பொய்யாமொழி முதலிய புகழுரைகளாற் புகழ்ந்து போற்றப்பெறும் திருக்குறளிலே தந்தருளினர்.

"தேவர் குறளுந்
திருநான் மறை முடிவும்
மூவர் தமிழு முனி
மொழியுங் — கோவை
திரு வாசகமுந்
திருமூலர் சொல்லும்
ஒரு வாசகமென் றுணர்".

என ஔவைப்பிராட்டியார் அறுதியிட்டுக் கூறும் உறுதிமொழிகள் அதன் பெருமையை உணரவிழைவார்க்கு இனிது உணர்த்துகின்றது. சமஸ்கிருதம் முதலிய இந்திய மொழிகளில் மாத்திரமன்றி ஆங்கிலம், இலத்தின், ஜெர்மன், பிறென்சு முதலிய மேலைத்தேச மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றதென்றால் இதன் பெருமை எவ்வாறு பாராட்டப்பெறுகிறதென்று சொல்லவும் வேண்டுமா?

தமிழ் மொழிக்கு இஃது ஓர் தனிச சிறப்பைத் தருகின்றது. சொல்லாட்சியென்றாலென் — பொருளாட்சியென்றாலென் சொல்லுக்கடங்காச் சிறப்பினதாய் மிளிர்கின்றது! உயிர் வாழ்க்கைக்கு வேண்டும் உறுதிப் பொருள்களெல்லாம் ஒருங்கே குவிந்து விளங்குகின்றன. இத் திரு நூலை ஒருவர் கற்றுத் தெளிவாரேயானால் அவர் மக்கட் பிறவியின் மாபெரும் பயனைப் பெற்றவராவர். உயர்ந்தவற்றன் உயர்ந்த பொருளை எளிதிற் கற்றுணரற் பாலதாய்த் தருகின்ற நூலொன்றுளதேல் அஃது திருக்குறளேயாம்.

எனவே, திருவள்ளுவ நாயனாரென்னுந் திருநாமத்தை நினைந்து போற்றும் இந்நாட்களிலே அவர் தந்தருளிய இத் திரு நூலை எம்மனோர்... தாம் கற்றுத் தெளிய வேண்டுமென்று உறுதியான விரதம் பூண்டு உய்தியடைவார்களாக!

வண்ணை

## வைத்தியேசுவரசுவாமி கோயில் உற்பத்தி

[ இந்துசாதனம், 3—2—53 - ன் தொடர் ]

### கூழங்கைத் தம்பிரான்

இப்படியிருக்கையில் கூழங்கைத் தம்பிரான் என்னும் ஓர் பெரியார் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்தில் வந்து கோபாலச் செட்டியாருக்கு நட்புடையவராயிருந்தார். அத் தம்பிரான் திருப்பனந்தாள் மடத்திலிருந்தபோது அம் மடாதிபதி தம்முடைய உருத்திராக்க கண்டிகை களவுபோயினமை காரணமாக இவரிற் சந்தேகங்கொண்டு அவரைச் சத்தியஞ் செய்யுமாறு கேட்க, அவர் கொதிக்கிற நெய்யிலே கையிடச் சொன்னாலுஞ் செய்வேனென்று கூறி, அவ்வாறு கூசாது கையிட்டுத் தன் சத்தியத்தை நாட்டி அதனும் கை கூழையாகப்பெற்றவர். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் மிக்க பாண்டித்திய முடையவர். சிவபத்தியும் சிவானுபூதியும் உடையவராவர்.

### ஸ்ரீமாந். வைத்திலிங்கச் செட்டியார் அவர்கள்

இந்தக் கோபாலச் செட்டியாருக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அதுகேட்டுக் கூழங்கைத்தம்பிரான் கோபாலச்செட்டியாரிடஞ் சென்று உன் புத்திரனைத் தூக்கிக்கொண்டுவா! என்றார். செட்டியார் மகிழ்ந்து அப் புத்திரனைத் தூக்கிக் கொண்டுவந்து அவருக்குக் காட்டினார். உடனே அவர் மிக மகிழ்வோடு ஆசீர்வதித்து "இப் புத்திரன் பெருங் கருமங்கள் முடிக்கப் பிறந்திருக்கிறான். இவனைச் செவ்வனே பாதுகாத்திடக்கடவாய் இவன் பெயர் வைத்தியலிங்கன்" என்று கூறிப்போயினர். மிக்க அழகும் திடகாத்திரமும நற்குண நற்செய்கைகளு முடையவனாய் வளர்ந்துபின்னை பன்னிரண்டுப் பருவம் அடைந்தான். ஒருநாள்செட்டியார் வைத்தியலிங்கனைக் கடையில் வைத்துவிட்டுப் போசனஞ் செய்யப் போயிருந்தார். அப்பொழுது தேசாதிபதி மனைவியார் கோபாலச்செட்டியார் கடைக்கு முன்னே

### ஸ்ரீ. சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார் அவர்கள் எழுதியது

தமது குதிரை வண்டியை நிறுத்திவிட்டுச் செட்டியாரெங்கே? என வினவினர். உடனே வைத்தியலிங்கன் எழுந்து போய் ஒரு மாதுளங் கனியை நீட்டி, "இதனைக் கிருபை கூர்ந்தங்கீகரித்தல் வேண்டும்" என்றான். அதற்கிடையில செட்டியாரும போசனம முடித்துக்கொண்டு மீண்டனர். தேசாதிபதியின் தேவி அவரிடம் "இச் சிறுவன் யாரோ" என்று கேட்கச் செட்டியார் "சிறியேன் புத்திரன்" என்றார். தேவி மகிழ்ந்து அச் சிறுவனைத் தமது வண்டியிலேற்றிக்கொண்டு தமது வீட்டுக்குச் சென்றார். தமக்குப் புத்திரரில்லாமையால் அன்றுமுதல் இச் சிறுவனை தமது புத்திரனாகப் பாவித்துவந்தார், போசன கோதத்துக்கு மாத்திரம் அவனை அவன் வீட்டுக்கு அனுப்பி மற்றைநக்கால மெல்லாம் தமது வீட்டிலேயே வைத்துத் தாமே ஒல்லாந்தபாஷையையும் பயிற்றி வந்தனர். பதினெட்டு வயசுவரையும் வைத்தியலிங்கன் தேசாதிபதிவீட்டில் இருந்தான். பின்பு ஒருநாள் தேசாதிபதி முத்துச் சலாபக் குத்தகை விறகப்போகிறாரெனக் கேள்விப்பட்ட வைத்தியலிங்கன், தன்னை வளர்த்த தாயாரிடஞ் சென்று "முத்துச்சலாபக் குத்தகை வாங்க விருப்புடையேன், அதனை வாங்குதற்கு உதவி புரிய வேண்டும் அம்மா" என்றான். தேவி முகம் மலர்ந்து அவனை நோக்கி "அப்பா, நீகுத்தகையேற்று நடத்துவாயா!" என்று கேட்க, அவன் "அம்மாவுடைய தயவு எனக்கிருக்கும் போது நடத்த வியலாதோ?" என்றான். அது கேட்ட தேவி ஒரு கடிதம் வரைந்து அவனிடம் கொடுத்து "இதனைக் கொண்டு போய்க் கச்சேரியில் உனது வளர்த்த தந்தையாகிய தேசாதிபதியிடங்கொடு" என்றார் அதனை வைத்தியலிங்கன் வணக்கத்தோடு வாங்கிக்கொண்டுபோய் வணங்கிநின்று தேசாதிபதியிடங் கொடுத்துப் பக்கததே நின்றான். அதனைத் தேசாதிபதி வாசித்து முகமலர்ச்சியோடு அவனை நோக்கி "முத்துக்குத்தகைவாங்கப்போகிறாயா?" என்று வினவ அவனும், "ஆம் ஐயா" என்றான். பிரதான மந்திரியாகிய கொச்சிக் கணேசையர் அவனை நோக்கி "நீயுங் குத்தகை வாங்கப் போகின்றாயா" என்றார். தேசாதிபதி கணேசையர் கேட்டதை அவதானித்து மனசிலே கோபமுடையவராகி ஐயரை நோக்கி, "முத்துக் குளிப்புக் குத்தகையை வைத்தியலிங்கச்செட்டியாரது பேருக்கு எழுதி, அதற்குப் பிணையாக உன்பெயரை எழுதுக" என்று கட்டளையிட்டார். ஐயர் தேசாதிபதி கருத்தை யறிந்து யாதுமெதிர்பேசாது குத்தகையை எழுதிவிட்டார். வைத்தியலிங்கச் செட்டியார் அக் குத்தகையை ஏற்றுக் கிரமமாக நடத்தி ஒரு லக்ஷ ரூபாவுக்குமேல் இலாபமபெற்றார். இப்படியே மூன்றுமுறை குத்தகை வாங்கிப் பேரிலாபம் படைத்தது மன்றிக் குணத்தாலும் கொடையாலும் நல்லொழுக்கத்தாலும் ஈசுர பத்தியாலும் சிறந்து பெரும் புகழும்படைத்தவர். இவர் சோழநாட்டிலே சங்கந்தி (சங்கேந்தி) யென்னுமூரிலே பெண்கொண்டவர். இவருடையதாயார் ஒருநாள் முத்துக் காய வைத்துக்கொண்டிருக்கும்போது பிச்சைக்காரனுக்கு ஒரு பிடி முத்தளளி வழங்கினரென்றால் குழைவிலாண்டு கோழியெறியும் பெருஞ் செல்வரினும் இவர் பெருஞ்செல்வர் என்பது சொல்லவும வேண்டுமா? ஒருநாள் கூழங்கைத் தம்பிரான் வைத்தியலிங்கச் செட்டியாருடைய வீட்டுக்குச் சென்றபோது, செட்டியாருடைய தாயார் அவரை உபசரித்து அவர் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்தார். தம்பிரான் அவரை ஆசீர்வதித்து

"சங்கேந்தி தங்கச்சி தையா
லென்பாரிக்கவளும்
சங்கேந்தி தங்கச்சி தையலே—
அங்கவளைக்
கோபாலன் தேவியெனக்
கூறவரின் இவளும்
கோபாலன் தேவியெனக் கூறு"

என்னுஞ் செய்யுளைக் கூறினர். கோபாலச் செட்டியாரின் மனைவி பெயர் தையலாச்சி. அவரும் சங்கேந்தியிற்பிறந்தவராவர். வைத்தியலிங்கச்செட்டியார் தமக்கொரு மாளிகை கட்ட வெண்ணித் தம்பிரானிடஞ்சென்று தமது கருத்தை வெளியிட்டனர். (வரும்.)

### சுதுமலை விஸ்வேச விநாயகர் சங்காபிஷேகம்

சுதுமலை விஸ்வேச விநாயகர் சங்காபிஷேகம் மாசி 15-ந் திகதி வியாழக்கிழமை (26 2.53) சுதுமலை விஸ்வேச விநாயகர் அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் அழகு பெற நிகழ அடியார் பெருந்தொகையினர் வழிபாடாற்றி யின்புற்றனர்.

## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

### இவ்வாரப் பலன்கள் 1—3—53——7—3—53

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

கடைசி இரு நாட்களையுந் தவிர இத்தவாரம் நலலாயிருக்கும், போட்டியிடுவோரை வெலலலாம். உம்முடைய சிறப்புக்கள் கவனிக்கப்படும். கடைசி இரு நாட்களும் உம்மைச் சிறிது நிலைதவறப்பக் கூடும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உத்தியோக நிலைய ஒழுங்கில் சில மாறுதல்கள் உண்டாகும். கூடிய பொறுப்புடன் கூடியவேலை செய்ய வேண்டி வரும். செலவு அதிகரிக்கும். ஆனால் அதற்கு வேண்டிய பணம் வரும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

நல்ல காலம் எல்லா முயற்சிகளிலும் சித்தி பெறக்கூடியதாயிருக்கும், பெண்ணின நண்பரால் அதிக உதவியுண்டு, காதகிராத இடங்களிலிருந்து பண லாபம் பெறுதல் நிச்சயம், அருஞ் செயல் வெற்றியும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

இத்தவாரம் சில உத்தியோகத் தொந்தரவுகளுக் கிடமுண்டு. செய்கைகளிற் கவனமா யிருக்கவேண்டும். அல்லது பிறர் பழிக்காளாவீர் குடும்பப்பகுதியில் பிழை எண்ணங்களுக் கிடமுண்டு வியாபாரம் வளரும். ஆனால் உடலின் பெறவதிற் சிறிது இடையூறிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

உத்தியோகத் துறையில் நல்ல காலம். ஆனால் உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. செலவதிகரிக்கும், நண்பருடன் பிழை எண்ணத்துக்குமிடமுண்டு வார இறுதி நல்ல புதினத்தைத் தரும்.

**கன்னிராசி** உத்திரம 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம பாதம்.

இந்த வாரம் முழுதும் அளவுக்குக் கூடிய வேலைவரும். அமைதியாயிருக்க இயன்றளவு முயன்றும் கோபத்தை யடக்குதல் வருத்தமாயிருக்கும், சிறு உத்தியோகத் தொந்தரவுக்கு மிடமுண்டு ஆனால் பெருந் தீமைகளுக்கிடமில்லை.

**துலாம்** சித்திரை 3.4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இத்தவாரம் உமக்கு நண்பர் அதிக உதவிசெய்வர், உத்தியோகத் துறையிலும் நல்ல காலமாயிருக்கும். ஆனால் குடும்பப்பகுதியில் எல்லாம் நல்லாயிராது, இனத்தவர்களுடன் சண்டைக்குமிடமுண்டு.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

ஆசைப்பட்டவற்றுட் சிலவற்றை இத்தவாரம் அடையக் கூடியதாயிருக்கும் போட்டியிடுவோரைவெலலுதலும் நிச்சயம், உமது மேலதிகாரி உம்முடைய சிறப்புக்களை ஒப்புக்கொள்வர். ஆனால் குடும்பத்தில் எல்லாம் நல்லாயிரா,

**தனுராசி** மூலம்பூராடம் உத்தராடம் 1 ம் பாதம்.

இந்த வாரம் ஒரு சிறு பிரயாணத்துக்கிடமுண்டு, உம்முடைய நண்பர்மூலம் அதிகலாபம் பெறக்கூடியதாயிருக்கும், குடும்ப சமாதானமும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**மகரராசி** உத்தராடம் 2,3,4ம பாதம்திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

வாரத்தின் முதல்நாள் உம்மை அதிகம் நிலைகுலைக்கும். பின்பு திருத்தம் நிச்சயம், புதன் கிழமை யின்பின் மிக நல்லகாலமனுபவிப்பீர். வார இறுதியில் தனலாபம் நிச்சயம்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

முன் அரை வாரம் உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும். மனச்சமாதானமிராது. பின்னரை வாரம் நிச்சயமாக மிக நல்லாயிருக்கும். உத்தியோகத்துறையிலும் நல்ல காலமிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

புதன்கிழமை காலைவரையில் கருமங்களை இலகுவாக நிறைவேற்றக் கூடியதாயிருக்கும். உத்தியோக சித்தியுமுண்டு. புதன் பிற்பகல், வியாழன் வெள்ளி உம்மை அதிகம் நிலைகுலைக்கக்கூடும், வாரத்தின் கடைசி நாள் திரும்பவும் நல்லாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விச் சாலைகளிற் சமயக்கல்வி

1-ம் பக்கத் தொடர்ச்சி

பத்திரிகை பேசிற்று. மெத்தச்சரி. ஆனால் அதுமட்டும் போதாது! இந்தக் காரியம் நல்ல பயன் எய்த வேண்டுமானால் ஆறு பகுதியினரின் ஒத்துழைப்பு வேண்டும்.

1. பாடசாலை அதிபர்கள்
2. தலைமை உபாத்திமார்.
3. உபாத்திமார்.
4. பிள்ளைகள்.
5. பெற்றோர்.
6. புத்தகங்கள்.

நீங்கள் புத்தகங்களைப்பற்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் ஸ்ரீமத் சிவபாதசுந்தரமவர்களனவும், சிவஸ்ரீ. குமாரசுவாமிக் குருக்களவர்கள இன்னும் இவர்கள் போன்றவர்கள் எழுதிய புத்தகங்கள் போதியவை என்ற கருத்துப்பட எழுதியதும் சிறந்த முடிபே. ஆகையால், எஞ்சிய நலு பகுதியினரிலும், பெற்றோரும் பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் நடைபெறுவதைப் பரமசித்தாந்தமாகக் கொண்டவராதலின் அவர்களை நீக்கி மற்ற இரு பகுதியினரைப் பற்றிச் சில கூற வேண்டும்:

உபாத்திமார் பொதுவாக யாவரும் சமய அறிவொழுக்க முடையராயிருத்தல்வேண்டும்.

தலைமை உபாத்திமாரிடம் சைவ சமயத்தில் ஆர்வமும் அறிவும் இறை அபிமானமும் அன்புமிருந்தால் பிள்ளைகள் சைவ சமய அறிவுடையவர்களாய்விட்டார்களென்பதற்குத் தடையுண்டா? இல்லை! இல்லை! இப்படிப்பட்ட தலைமை உபாத்திமாரைத் தெரிந்தெடுப்பது அதிபர் மாரிற் றங்கவில்லையா?

சைவப் பள்ளிக்கூட அதிபர்சர்மார் இனிமேலாவது இதை உணருவாராக! உணராதாற சைவம் வளர்த்துவன்னலாம்;

## யாழ்ப்பாணக் கமக்காரரின் இன்னல்....

முதலாம் பக்கத் தொடர்ச்சி

உணவுப் பொருள் உற்பத்தி செய்ய இயலுமென்றுதான் நினைக்கிறார்களா? இன்றேல் இதற்கு யாது செய்யவேண்டுமென்று சிந்தித்தார்களா, சிந்திக்கிறார்களா, சிந்தப்பார்களா? இந்தியாவின் உணவுப்பொருள் உற்பத்தியில் ஊக்கஞ் செலுத்துங்கள் செலுத்துங்களென்று பிரசாரஞ் செய்வதன் கருத்தென்னோ? கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்துக் குடியேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதன் நோக்கந்தானென்னோ?

இத்தகைய இன்னல்களுக்காளாகும் யாழ்ப்பாணக் கமக்காரனுக்கு அரசாங்கம் யாதாயினும் உதவி புரியுமா? இன்றேல் மேலே காட்டிய வல்நெஞ்சத்தாலாம் வன் சொற்கள வன் செயல்களை விடுத்து இன்சொல்லாலும் இயன்றளவு வேறு இன் செயலாலுமாயினும் சிறிது ஊக்கமளிக்குமா?

மலாயா,
புங்குடுதீவு ஐக்கிய சங்கம்.

20-2-53 ல் நடந்த மேற்படி சங்க வருடாந்தக் கூட்டத்தில் பின்வருவோர் புதிய ஆண்டு உத்தியோகத்தராய்த் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: கௌரவ Dr. A. E துரைசாமி, உப தலைவர்: திரு. R. P. சின்னத்துரை, காரியதரிசி: திரு. N. பொன்னம்பலம், தனாதிகாரி திரு. V. S. மணியம்.

திருவாகசபை அங்கத்தவர்கள்: திருவாளர்கள் S. இராமலிங்கம், T. S. நாதன், S. N. கனகசுந்தரம், K. தில்லையம்பலம், S. செல்லையா.

கணக்குப் பரிசோதகர்கள்: திரு. M சின்னையா, திரு. N. அருணாசலம்.

பரிபாலகர்: Dr. V. F. சிவரத்தினம், திரு. K. கந்தையா.

## சரியையாதிநெறிகளின் தாற்பரியம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

லொழுகினுற்றான் நாம் படிப்படியாக ஞானமார்க்கத்திற் செல்லுதற் குரியவராவோம். தாத மார்க்கத்திலொழுகாது சன்மார்க்கத்தையடைய முயல்வது ஒருவன் முதற்பணமில்லாது வர்த்தகஞ் செய்து இலாபம் பெற முயல்வது போலவாம்.'

திருநாவுக்கரசு சுவாமிகள் முதலிய வைதிக சைவ குரவர்கள், பரமாத்வைத ஞானிகளாக விளங்கினரென்பது ஒருதலையாகலின், அவர்களொழுக்கத்தைத் தவறாது மேற்கொண்டொழுகுவது நமக்கத்தியாவசியமான கடமையாம். "நால்வர் சொற்படி நட" என்பது உலகவழக்கன்றோ? பரமாத்வைத ஞானிகளாக விளங்கிய அப்பர் முதலிய நால்வர் ஒழுக்கத்தை மேற்கொண்டாலன்றோ, நாம் நமக்கும் அயனுக்கும் (பிரமனுக்கும்) நடுங்காது வாழ்வதற்குரியவராவோம். அவர்கள் "பெரியவர் பயின்ற படியலாற் பயிலார் பின்புளோர்" என்று யாதவனுக வத்தவதாரஞ் செய்த நாராயணனது கீதாவாக்கியத்திற் கிலக்கியமாக நின்று, வெலந்தரிய திமுயற்சியையும், விடயமென்னும் பெரும் பசையினையு முடையவராகி, ஆபத்திற்கெல்லா மாஸ்பதமாக விளங்குஞ் சோகமோகக் கடலுள் முழுகி வதையும் நம்மனோர் காலக்கிரமத்தில் வைராக்கியமுடையவராய், தன்னை (ஆத்மாவை) யறிந்து, ஐயந்திரிவு நீங்க, தானறிவானந்தமாக விளங்கச், சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நான்கு மார்க்கங்களிலும் ஒழுகு முறைமைகளைத் தாமேயொழுகிக் காட்டினார்கள் இம்முறைமைகளை யறிந்தொழுகுவோமாயின், நாம் நன்னிலையை யடைவது நிச்சயமாம். இந்நிலையினையடையப் பரமேசுவரனை யிடைவிடாது போற்றுவோமாக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

A. S. சாணுசலம் பலாலி
றோட்டு, யாழ்ப்பாணம்
—வழக்காளி.

இல. 7226 எதிராக

சிறு பிள்ளைகள்,

1. குமாரசாமி மகள் தவமணி
2. ,, மகன் ஜெகநாதன்
3. ,, மகள் பாலசரஸ்வதி
4. இராமலிங்கம் கந்தையா பெண் தவமணி
5. இராமலிங்கம் கந்தையா

தர்போது யோசேப் வில்லா மகா குளிப்பிட்டியா, நீர்கொழும்பு

6. A. S. இராமலிங்கம் பலாலி றோட்டு யாழ்ப்பாணம்

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் 7226-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் சட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1953ஹூ சித்திரைமீ 9உ வியாழக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 5680 ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 4000க்கு 6 வீத வட்டியையும், 31-10-50—23-5-51 பின் முழுத்தொகைக்கும் 5 வீதம் இறுபடும் வரைக்கும் கோட்டுச் செலவு ரூபா 439-72.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை கிழக்கு இறை, "கம்பனவயல்" பரப்பு கி. இல. 7, குளி 13 கல்வீடும், குசினியும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் இந்த நிலை இலாச்சம் ஏழு குளி பதின்மூன்றுக்கும் எல்லை கிழக்கு சபாபதிஐயர் கந்ததாசக் குருக்கள் வடக்கு வாய்க்கால் மேற்கு சிதம்பரப்பிள்ளை லயித்திலிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம், தெற்கு றோட்டு இதடங்கலும்.

S. RATNASABATHY,
Commissioner of Sales
and Valuator.
25-2-53.
M. 258 27—2—53.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைதீவு வடக்கு குருநாதி கைம்பெண் சின்னப்பிள்ளை.
—வழக்காளி.

இல 9074 எதிராக

காரைதீவு வடக்கு V கந்தையா கைம்பெண் செல்லம்மா தனது காலஞ்சென்ற புருஷன் V. கந்தையாவின் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுத் தத்துவம் இல. 1127ல் தத்துவகாரியாக —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 9074-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1953ஹூ பங்குனிமீ 14உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா:1859-37ம் ரூபா:1500/=க்கு 5-8-52 தொடக்கம் 5-11-52 வரைக்கும் 5 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 200-77 சதம்.

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று கனபூமியிறை 'தம்பன்' பா. செ. இல. பத்து(10) எல்லை கிழக்கு சண்முகம் அருணசலத்தின் ஆதனம், வடக்கு கந்தையா குழந்தைவேலுவினுதனம், மேற்கு வேலுப்பிள்ளை பெண் பாறுவதியினுதனம், தெற்கு இளையதம்பி சின்னத்துரையினுதனம், இவ்வாதனம் காரைதீவு மேற்கு கந்தப்பர் வேலுப்பிள்ளைக்கும் பெண் பாறுபதிக்கும் சீவிய வுரித்திற்கமைவாயிருக்கிறது.

2. ஷை தங்கோடையிறை 'கிளிசை' பா. கி. இல. ஏழு (7) பனைகள் வடலிகள் வான் பயிர் செய்பயிர்களும் எல்லை கிழக்கு பொன்னையா முருகேசு வினுதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு வேலாயுதர் தம்பையாவினுதனம், தெற்கு வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தினுதனம்.

1953ம் ஆ மாசிமீ 10ம் உ.
வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்.


டயறம்ஸ் வருடா வருட

இனும்! காசுத் துண்டு இனுமாகவா?

ஈஸ்ரர்கால விற்பனவு

1953-ம் ஆண்டு மார்ச் மீ
2-ந் திகதி தொடக்கமாக
புதிய பொருட்கள்! மலிந்த விலை!!
வந்து பாருங்கள்!!!
வீட்டுப் பாவிப்புக்குத் தகுந்தவை
பாடசாலை உடைகளுக் குரியவை!
உயர்ந்த ரகச் சேலைகள். சிறந்த கவனத்திற்குரியன.

இனும்! இனும்!! இனும்!!!
இந்த விற்பனை காலத்தில்
ஒவ்வொரு பத்துரூபா பெறுமதியான
அணிகள் வாங்குபவருக்கு
ஒவ்வொரு காசுத்துண்டு வீதம் கொடுபடும்
இப்படியான5துண்டுசேர்த்துத்தருபவருக்கு ரூபா2காசாகஇனும்
,, 10 ,, ,, ,, ,, 5காசாகஇனும்

இப்படியான இனுங்கள் எங்கே?
மறந்துவிடாதீர்! இவை உங்கள் பழக்க வழக்கமான
பட்டுப் புடைவைக் கடையில் மாத்திரந்தான்
அதுதான்
டயறம்ஸ்
54-60, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


## கந்தபுராண விரிவுரைகள்

22—2—53 ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையாதரவில் கச்சியப்ப சிவாசாரியார் திருநாள் இச்சபையினது சைவாச்சிரமநாவலர் மண்டபத்தில் கொண்டாடப்பட்டது.

அச்சமயம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை தமிழ்ப் பேராசிரியர் பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் கந்தபுராணத்தைப்பற்றி ஒரு விரிவான பிரசங்கஞ் செய்தார்கள். கந்தபுராணத்தின மகத்துவத்தைப் பொதுப்படக் கூறி, காசிபர் உபதேசம். மாயை உபதேசம், சுக்கிரன் உபதேசம் ஆகியவற்றை விளக்கி, "உண்மைச்சமயமெது"? எனச் சபையோர் விளங்குமாறு இலகுவான நீந் தமிழ் நடையில் விளக்கினார்கள்.

பண்டிதமணி அவர்கள் கந்தபுராணத்தைப்பற்றிச் செய்துள்ள ஆராய்ச்சிகளை நமது நாட்டு மக்கள் உய்யுமாறு நாவலர் மண்டபத்தில் தொடர்ந்து பிரசங்கிக்கும்வண்ணம் சபையோர் கேட்க அவர்களும் அதற்கு இசைந்தனர்.

கந்தபுராண விரிவுரைகள் சபையாதரவில் நாவலர் மண்டபத்தில் பண்டிதமணி அவர்களால் ஞாயிற்றுக் கிழமை தோறும் மாலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையும் நடைபெறும்.

தமிழபிமானிகளும் சைவ அபிமானிகளும் இவற்றைக் கேட்டின்புறுவார்களாக.

மு. மயில்வாகனம்
சபைப்பிரசார அமைச்சர்
சை. ப. சபை, யாழ்ப்பாணம்.


L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

தங்கமாளிகை — நகைகள் கிடைக்குமிடம் (பக்க வாசகம்)

நகைகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையின்
மிகப் பெரிய
நகை
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னுதிட்டி
யாழ்ப்பாணம்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் காலஞ்சென்றுபோன யாழ்ப்பாணம் காரைநகர் போல் யோசேப்பின் ஆதனங்களின் தத்துவம்.

இறந்தவர்

தத்துவ

இல. 1353. T

யாழ்ப்பாணம் காரைநகர்

போல் யோனு
தத்துவகாரன்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1353 T-ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1953ஹூ பங்குனிமீ 21உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

காரைநகர் வலந்தலையிறை 'மல்லிகை' பா. கி. இல. 5½ பனைகள் வடலிகளும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி ஆறுமுகநாதரின் ஆதனம், வடக்கு P. ஆறுமுகத்திற்கும், பொன்னம்பலம் பெண் செல்லம்மாவிற்கு முரிய வாதனம், மேற்கும் தெற்கும் ஒழுங்கை.

1953ஹூ மாசிமீ 18உ.
வை. ஏரம்பமூர்த்தி
கொமிஷனர்,
M. 259 27—2—53.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் காரம்பன் ஊர்கா வற்றுறை வி. தம்பிப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைத்து மீட்கப்படாதிருக்கும் கீழ் காணும் நகைகள் என்னல் *1953* ம் ஹூ பங்குனி மூ *28*-ம் உ முற்பகல் 9 மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| அடைவு வைத்த திகதி | நம்பர் | தொகை | அடைவு பொருள் | பெயரும் ஊரும் |
|---|---|---|---|---|
| 5—9—51, | (3096/29) | 25-00 | ஒரு தாலி | நா. வேலுப்பிள்ளை காரம்பன் தெற்கு. |
| 27—10—51 | (3348/129) | 140-00 | ஒரு சோடி காப்பு ஒரு மோதிரம் | ஐ. கனகம்மா, காரம்பன். |
| 8—11—51 | (3380/23) | 40-00 | ஒருசோடி தோடு, ஒரு மோதிரம் | நா. அப்புக்குட்டி, காரந்தனை. |
| 12—11—51 | (3417/60) | 100 00 | ஒரு சங்கிலி, | நா. சரவணை, காரந்தனை |
| 3—12—51 | (3497/6) | 20-00 | ஒரு சோடி தோடு, | கு. சின்னத்துரை. சரவணை. |
| 3—12—51 | (3498/6) | 175 00 | ஒரு தாலிக்கொடி, | வை. சோமசுந்தரம், காரந்தனை. |
| 23—12—51 | (3580/89) | 80-00 | ஒரு சங்கிலியும் பென்ரனும், | அ. அரியர், ஊர்காவற்றுறை. |
| 24—12—51 | (3582/91) | 50 00 | ஒரு பென்ரன் | ச. சின்னத்துரை காரம்பன். |
| 9—1—52 | (3639/34) | 10-00 | ஒரு மோதிரம் | சவுரி பேதுரு சரவணை மேற்கு. |
| 29—1...52 | (3729/124) | 10-00 | ஒரு மோதிரம், | ஐ சுப்பிரமணியம், சரவணை கிழக்கு. |

1953 ஹூ மாசிமீ 25-ம் உ.

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer.

M. 260. 27/2 3/3


## திருவள்ளுவநாயனுர் குருபூசை

---

நாள்: நந்தன ஹூ மாசிமூ கக (*2-3 53*) திங்கட்கிழமை
நேரம்: இரவு $6\frac{1}{2}$ மணி
இடம்: சபைச் சைவாச்சிரம நாவலர் மண்டபம்.

### நிகழ்ச்சிகள்

1 கடவுளாராதனையும் தமிழ்மறை யோதலும்

2 பிரசங்கம்
நாயனுரைப்பற்றி மாணவர் பிரசங்கம்
"திருவள்ளுவர் பெருமை"
திரு க. சிவராமலிங்கம் B. A.
"திருக்குறளும் சைவமும்"
பிரமஸ்ரீ
வ. மு. இரத்தினேசுவரஐயர்

சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்
*சமயப் பிரசார அமைச்சர்*
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம்
25—2—53.
M 261 27-2


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆடு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா]
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.


# 'நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'

---

# தீமையை நீக்கும் திருச்செந்தூர்

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி"

நெல்லியூர்
ஸ்ரீ வ. குகசர்மா

என்று திருமுருகாற்றுப் படை ஆரம்பம் கூறுகிறது. கடற் கரையின்கண்ணே சூரியோதயம் ஏற்படுவதைத் தரிசிக்கும் ஞானிகள் மயில்மீதிவர்ந்துவரும் முருகனது தோற்றத்தையே தரிசிப்பார்கள். இவ்வாறு இயற்கையில் முருகனைத் தரிசிக்கக்கூடிய ஒருஇடத்திலே, கடல் அலைகள் ஓம் என்ற பிரணவ நாதத்துடனே கரையில் மோதும் ஒரு இடத்தின்கண்ணே, முருகப் பெருனின் ஆறுபடை வீடுகளில் ஒன்றுகிய திருச்செந்தூர் என்று கூறப்படும் திருச்சீரலைவாய் அமைந்திருப்பது ஓர் தனிச் சிறப்பாகும்.

ஆறுமுகப்பெருமான் தாரகனைச் செற்று சூரபன்மன் முதலியோரைக்கொல்ல முன்பு திருச்செந்தூரிலும் யுத்தம் முடிந்தபின திருப்பரங்குன்றிலும் எழுந்தருளியிருந்தார் எனக் கந்தபுராணம் கூறும். எனவே திருச்செந்தூரில் எழுந்தருளிய முகூர்த்தம் அடியார் இன்னலை நீக்க அருள்கொண்டு எழுந்தருளிய திருவுருவமாகும். தனக்கு கிராக வந்து அமர்ந்த வீரவாகு தேவரைச் சூரபன்மன் "நீயார்" என்று வினவுகிருன். அப்போது வீரவாகுதேவர் பின் வருமாறு விடையளிக்கின்ருர்.

புரந்தரன் குறையயன்
முதலமரர் தம்புன்மை
வருந்தும் வானவர் சிறை
[பெலா
நீக்க மற்றவர்தம்
திருந்து தொல்லிறை யுதவு
[வான்
செந்தி மாநகர்வந்
திருந்த வாதியம் பண்ணவ
னடியனேன் யாலே.'

இந்தக் கூற்றும் ஆன்மாக்களுக்கு அருள்புரிய வந்த இடமே இவ்விடம் என்பதை வலியுறுத்தும். பிறவியை நீந்த முடியாத கடலாக உவமிப்பது நூல் வழக்கு. 'வெம்பிறவி வேலைதனில் விழ்பவர்களெல்லாம் கம்பு சிவஞானமெனும் கற்புணை பிடித்தால்'' என்ருர் பிறரும். பிறவித்துன்பம் கடல் போன்று விசாலமானதும் ஆழமானதுமாகும் எனவே அதனுள வீழ்ந்தழுந்தாமல் எனது திருவடிகளையே கம்புங்கள் என ஆன்மாக்களுக்கு எடுத்துக் காட்டுகின்ருர்.

நக்கீரர் தாம் செய்த திருமுருகாற்றுப்படையிலும்,

"தாவில் கொள்கைத்
தந்தொழில முடிமார்
மன்னேர் பெழுதரு
வானிற முகனே
மாயிரு ஞால
மறுவின்றி விளங்க
பல்கதிர் விரித்தன்
றொருமுக மொருமுக
மார்வல ரேத்த
வமர்ந்தினி தொழுகி
காதலின் வந்து
வரங் கொடுத்தன் றே..."

என்று திருச்செந்தூர் முருகப்பெருமான் அடியார்க்கு வரங் கொடுக்கும் பெருமையையே சிறப்பித்துக் கூறபபட்டுள்ளது. திருப்பரங்குன்று முதலாகச் சொல்லப்பட்ட ஆறுபடை வீடுகளும் அறுமுகப் பெருமான் அமரும் கோயில் கள்தான். திருப்பரங் குன்று விவாகம் நடந்த இடமாகக் கருதப்பெறுகின்றது. பழனி மலையில் தன் கிழப்பெரும் வடிவம் காட்டி கிற்கின்ருர். திருச்சீரலைவாயிலில் அடியாரின் துன்பத்தை நீக்க எழுந்தருளியுள்ளார். "மரத்தில் மறைந்தது மாமதயானை மரத்தை மறைத்தது மாமதயானை" என்ருர் திருமூலர். ஆலய வழிபாட்டின் அருமை குறைந்துவரும் இக்காலத்திலே அதிலுள்ள யானை மறைந்து வெறும் மரமாகத் தோன்றும். கடவுள் அருள் மறைந்து வெறும் செம்பும் கல்லுமாகத் தோன்றும். சூரபன்மனே சிறிது ஞானக் கண்ணைப் பெற்றபின்பும் அளவில்லாத விழிகளால் அளவிலாத காலம் பார்க்கினும் பார்வை தெவிட்டவில்லை என்கிருன். "நாலாயிரம் கண் படைத்திலனே" என்று அருணகிரியார் அலறுகின்ருர். ஆகவே திருச்செந்தூர் முருகனை வாழ்த்தி வழிபாடாற்றி நம் வாழ்வை வளமுறச் செய்வோமாக.

---


இல்லற இன்பம் இனிதே அனுபவிக்க

பழனி, சி. எம். சாமி

## அதிபலக் குளிகை

— உபயோகியுங்கள் —

அசதி, பலவீனம், நரம்புத் தளர்ச்சி முதலியவற்றை நீக்கி உடல் பலம், இந்திரியக்கட்டு, இன்ப சக்தி முதலியவற்றை உண்டாக்குகிறது! ஒருமுறை சோதியுங்கள்!!

60 குளிகை விலை ரூ 6-0-0.

ஏஜண்டு:— S. பொன்னுச்சாமி பிள்ளை,
133, தம்பகொடாதெரு, பலாங்கொடை.

தலைமை ஆபீஸ் (௬)
மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி, S.I.



## சிறந்த கொழுக்கி ஓடுகள்

பேசல் மிசன் கோட்டை மார்க் இரட்டைப் பிலி கொழுக்கி ஓடுகளே மறறை எல்லா ஓடுகளிலும் சிறந்தவை. எப்படி மழை பெய்தாலும் கசிந்தொழுகமாட்டா. வெயில் மழைகளினுல் பங்கப்படாது நீடித்தகாலம் பாவிக்கக் கூடிய திண்மை உடையன!

கிடைக்குமிடம்:
வில்லியம மேதர் சன்ஸ்,
சோல் ஏஜென்ஸ்,
யாழ்ப்பாணம்.

[M. 225. 23—24-4-53.]



| திறமான | திறமான |
|---|---|
| தேக்க மரங்கள் | ருணிமார்க்ஓடுகள் |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2


Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. Lond) residing at 245; Navalar Road Jaffna. for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Friday! February 27 1953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org